[2004 பிப்ரவரி 5

6–

அரசு தொழில்நுட்பக் கல்லூரி

***38864–திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஆரணி தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசுத் தரப்பில் புதிய தொழில்நுட்பக் கல்லூரி ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, ஆரணி தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று ஆரணி தொகுதிக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டிருந்தேன். அந்த வாய்ப்பு இல்லை என்று சொன்னார். ஆனால், இந்த ஆண்டு வாய்ப்பு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டாவது, அம்மாவின் நல்லாட்சியிலே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற தத்துவத்தின் அடிப்படையில், மறுபரிசீலனை செய்து ஆவன செய்யப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியைச் சார்ந்த திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே 8 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அந்த 8 பாலிடெக்னிக்குகளிலும் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவிகளினுடைய எண்ணிக்கை 2,200. ஆனால் அதிலே மாணவ, மாணவிகள் சேர்ந்தது போக, 1027 இடங்கள் இன்னமும் காலியாக இருக்கின்றன. எனவே, மாணவர்கள் சேர்வதற்கு ஆர்வம் இல்லாத நிலையில், மேலும் அங்கே பாலிடெக்னிக்குகளை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை. அது தேவையானதும் அல்ல என்று அரசு கருதுகிறது. எனவே, இப்பொழுது அந்தக் கேள்வி எழவில்லை.

2004 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்.

திரு. ஜெமினி கே. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் கல்லூரிகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார்கள் நடத்துகின்ற இடங்களிலே பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. அங்கே வசதி வாய்ப்புகள் சரியாக இல்லை என்பதால்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இப்பொழுது அரசுக்குச் சொந்தமான இடம், ஆர்.இ.டி.சி., எஸ்.வி. நகரம்–சத்திய விஜய நகரம் என்று சொல்வார்கள். அந்த இடத்திலே 50 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம், ஜாகீர் இடம் என்று இருக்கிறது. அது சும்மாவே இருக்கிறது. ஆகவே, அரசு சார்பில் கட்டினால் பிள்ளைகள் ஆர்வமாக அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு மாண்புமிகு அண்ணன் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தனியார் பாலிடெக்னிக்குகளில் அடிப்படை வசதிகள் இல்லையென்று சொன்னால், அதை ஆராய்வதற்கு, அதைக் கண்காணிப்பதற்கு, மூன்று நபர்களைக் கொண்ட ஒரு Affiliation Committee இருக்கிறது. எனவே, எந்தெந்த பாலிடெக்னிக்குகளில் அடிப்படை வசதிகள் குறைவாக இருக்கின்றனவோ, அதை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் அதை de-affiliate செய்வதற்குக்கூட அந்த கமிட்டிக்கு அதிகாரம் இருக்கிறது. அதேபோல, அந்த பாலிடெக்னிக்குகளை நடத்துகிற நிறுவனத்திற்கும் அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு நாங்கள் வாய்ப்புகளைக் கொடுக்கிறோம். அந்த வகையிலே, இப்போது அந்த Affiliation Committee தனியார் பாலிடெக்னிக்குகளைக் கண்காணித்து வருகிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, புதியதாக பாலிடெக்னிக்குகளை ஆரம்பிப்பதைவிட, இருக்கிற பாலிடெக்னிக்குகளைத் தரம் உயர்த்தி, வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்வதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையிலே, இந்த ஆண்டு மட்டும் 3 அரசு பாலிடெக்னிக்குகளைத் தரம் உயர்த்துவதற்கு 25 கோடி ரூபாயை உலக வங்கியிடமிருந்து கடனாகப்

பெறுவதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கான ஒப்பந்தம் இந்த மாதம் போடப்பட இருக்கிறது. அப்படிப் போடப்படுகிறபோது, இருக்கிற பாலிடெக்னிக்குகளின் தரம் உயர்த்தப்படும். தொடர்ந்து அரசு பாலிடெக்னிக்குகள், அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள் இந்த நிதியைப் பெறுவதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, இருக்கிற பாலிடெக்னிக்குகளைத் தரம் உயர்த்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்திலே, அரசுக் கல்லூரிகளைத் தொடங்குவதில்லை என்ற ஒரு concept இருப்பதாகச் சொன்னார்கள். அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படாமல், தனியார் கல்லூரிகளைத் தொடங்குகின்ற நேரத்திலே, அதிலும் குறிப்பாக, சுய நிதிக் கல்லூரிகள் தொடங்குகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் கல்வியைக் கடைச் சரக்காக விற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஏழையெளிய, அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட குழந்தைகள் அந்தக் கல்லூரிகளில் கட்டணம் செலுத்திப் படிக்க முடியாத நிலையெல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும். இன்னும் தனியார் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு முழுமையாகப் பின்பற்றப்படுவதே இல்லை, சுய நிதிக் கல்லூரிகளிலே. அப்போது தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழையெளிய குழந்தைகள் படிப்பதற்கு எங்கே செல்வது? ஆகவே, அந்த வகையிலே அரசுக் கல்லூரிகளைத் தொடங்குவது பொருத்தமாக இருக்கும் என்று, அதையும் இங்கே கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், கல்விக் கட்டணம் உயர்த்தியதற்கு எதிர்க்கட்சிகள் எல்லாம், அதிலும் குறிப்பாக, நான் உட்பட நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிரச்சாரம் செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுவல்ல....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே விவாதத்திற்கு இடமில்லை.

வினா எண் 7, திரு. பெ. வாசுதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.